## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 12 |
| Name | : | திரு.வேலுச்சாமி |
| Father Name | : | திரு. ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.03.2026.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் காவல் துணை கண்காணிப்பாளராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 04.03.2021ம் அன்று நான் புளியம்பட்டி காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்து சமயம் நிலைய குற்ற எண். 739/2020 இ.த.சட்டப்பிரிவு 302 உ/இ 201 வழக்கு கோப்பை எனக்கு முன்பு பணியிலிருந்த ஆய்வாளர் திருமதி.நாகலட்சுமி அவர்கள் பணிமாறுதல் சென்றதால் வழக்குகோப்பை பெற்று அன்றைய தினம் சாட்சிகள் செல்வராஜ், வணிதாமணி, நாகராஜ், கஸ்துாரி சரவணகுமார் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்றும்

சாட்சிபகள் ராஜம்மாள், தனபால், சிவஞானம் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.03.2021 அன்று சாட்சி சரோஜினி என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்றும் சாட்சிகள் செந்தில்குமார், கௌதம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.04.2021 அன்று சாட்சிகள் மருத்துவர் திரு.சங்கர், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழககின் சட்டப்பிரிவை கு.வி.மு.ச பிரிவு 174 ல் இருந்து இ.த.சபிரிவு 302 ஆக மாற்றம் செய்து நீதித்துறை நடுவர், சத்தியமங்கலம் அவர்களுக்கு சட்டமாறுதல் அறிக்கையை சமர்ப்பித்தேன். சட்ட மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.12.** 06.05.2021 அன்று சந்தேக கைபேசி எண்கள் 7 எண்ணிக்கையிலான அழைப்பேசிகளுக்கு அழைப்பு விவரங்களை கேட்டு ஈரோடு காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 10.07.2021 அன்று உதவி ஆய்வாளர் திரு.பன்னீர்செல்வம். தலைமை காவல் சக்திவேல் ஆகியோர்களை எதிரிகள் பற்றி அறிய தனிஅலுவலாக நியமித்தேன். 29.09.2021 அன்று தலைமை காவலர் பாலசுப்ரமணியம், தலைமை காவலர் சக்திவேல், காவலர் அறிவழகன் ஆகியோர்களையும் சிறப்பு புலன் விசாரணைக்காக தனிஅலுவலாக நியமித்தேன். 02.05.2022 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஸ்வரன், தலைமை காவலர் குமார் ஆகியோர்களையும் தனி அலுவலாக நியமித்தேன். 11.05.2022 அன்றில் நான் பதவி உயர்வு பெற்று காவல் துறை கண்காணிப்பாளராக சென்றதால் வழக்கு கோப்பினை எனக்கு பின்னிட்டு வந்த புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தை நான் நேரில் சென்று பார்த்தேன் என்றால் ஆமாம். சம்பவ இடம் தங்கராஜ் என்பவருக்கு சொந்தமானது மேற்படி தங்கராஜை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. நான் விசாரித்த சாட்சி வனிதா மணி எனது விசாரணையில் தனது அப்பாவிற்கு சிறுவயது முதல் குடிபழக்கம் உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் திரு.சங்கர் அவர்களிமிருந்து இறுதி கருத்துரையை நான் எப்போது பெற்றேன் என்றால் நான் அவரிடமிருந்து பெறவில்லை. எந்த அடிப்படையில் சட்டப்பிரிவு 302 ஆக வழக்கை மாறுதல் செய்தேன் என்றால் எனக்கு முன்பு இருந்து புலன்விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி பதிவு செய்திருந்த வாக்குமூலங்கள் மற்றும் வழக்கு கோப்பினை ஆராய்ந்துதான் சட்டமாறுதல் செய்தேன். மருத்துவரின் இறுதி அறிக்கையின் அடிப்படையில் நான் சட்டப்பிரிவை மாறுதல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனக்கு முன்பு இருந்த புலன் விசாரணை அதிகாரி சட்டப்பிரிவை மாற்றம் செய்யவில்லை என்றால் ஆமாம். சட்டப்பிரிவு மாற்றத்தை நான் எந்த தேதியில் செய்தேன் என்றால் 22.04.2021 அன்று சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து 28.04.2021 ல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளேன். மேற்படி காலதாமதத்திற்கு காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கை வருவாய்துறையினரின் விசாரணைக்கு அனுப்பவில்லை என்றால் நான் அனுப்பவில்லை. நான் சரியான சட்டவிதிமுறைகளை கடைபிடிக்காமலும், தொடர் புலன் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல.